# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப, (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 473/2016/பே

ஆணை எண். 245 /நாள் : 11 –10–2017

திரு ஆர். ஆறுமுகம்,
முன்னாள் 1 வது வார்டு உறுப்பினர்
மோப்பிரிபாளையம் பேரூராட்சி,
காடுவெட்டிபாளையம் அஞ்சல்,
சூலூர் வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம். ——– முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
மோப்பிரிபாளையம் பேரூராட்சி,
சூலூர் வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம். ——– எதிர் மனுதாரர்.

ஆணை

திரு ஆர். ஆறுமுகம், முன்னாள் 1 வது வார்டு உறுப்பினர், மோப்பிரிபாளையம் பேரூராட்சி, காடுவெட்டி அஞ்சல், சூலூர் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களின் 11.06.2014 ம் நாளிட்ட முறையீட்டு மனு, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண் 15934/2014/இ.2/நாள் 13.05.2016 ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் 30.05.2016 ல் பெறப்பட்டு 473/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் திரு ஆர். ஆறுமுகம், முன்னாள் 1 வது வார்டு உறுப்பினர் மோப்பிரிபாளையம் பேரூராட்சி, தனது முறையீட்டு மனுவில் மேற்படி மோப்பிரிபாளையம்

பேரூராட்சி முன்னாள் தலைவர் மீது கீழ்கண்ட புகார்களை தெரிவித்து தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

1. அரசு அனுமதி பெறாமல் மேற்படி பேரூராட்சியில் 2005 ம் ஆண்டு முதல் நூற்பாலைகள் இயங்கி வருவதாகவும்,
2. 20 க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் அரசின் அனுமதி பெறாமல் இயங்கி வருவதாகவும்,
3. 2003 ஆம் ஆண்டு கலைக்கப்பட்ட வாகை சிறு வியாபாரிகள் சங்க சட்டிடத்திற்கு குடிநீர் இணைப்பும் வரி விதிப்பும் செய்யப்பட்டுள்ளதாகவும்,
4. தேவைக்கு அதிகமாக எரிபொருட்கள் வாங்கப்பட்டுள்ளதாகவும்,
5. தொலைபேசி கட்டணமாக ஆண்டு ஒன்றுக்கு ரு 1.00 லட்சம் வரை செலவிட்டது,
6. ஆழ் குழாய் கிணறு அமைத்தலில் முறைகேடுகள்,
7. வார்டு எண் 6 ல் சர்வே எண் 184/A, 2A ல் அங்கீகாரமற்ற மனைகளில் வரி விதிப்பு செய்துள்ளது,
8. பாப்பம்பட்டி அம்மன் கோயில் நிலத்தில் ஆயிரக்கணக்கான மண் லோடுகள் விற்பனை செய்தல்,
9. உரிய அனுமதியின்றி பேரூராட்சியின் நிதியினை வேறொரு வங்கிக்கு மாற்றியது,
10. நாய் கொட்டில்கள் கட்டாமல் தொகை எடுக்கபபட்டது,

போன்ற புகார்களை தனது முறையீட்டு மனுவில் தெரிவித்து விசாரணைக் கோரி சமர்புத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 473/2016/பே/நாள் 08.12.2016 ன்படி மேற்படி முறையீட்டு மனுதாரரின் புகார்களுக்கு விளக்கம் அளிக்கக் கோரி மோப்பிரிபாளையம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

புகார் மனு சம்பந்தமாக கீழ்கண்ட நபர்கள் விசாரிக்கப்பட்டனர்.

1. திரு ஆர். பாலசுப்பிரமணியம், முன்னாள் 6 வது வார்டு உறுப்பினர், மோப்பிரிபாளையம் பேரூராட்சி.
2. திரு ஆர். ஆறுமுகம், முன்னாள் 1 வது வார்டு உறுப்பினர், மோப்பிரிபாளையம் பேரூராட்சி,
3. திரு பா.கந்தசாமி, செயல் அலுவலர், மோப்பிரிபாளையம் பேரூராட்சி.

மேலும் இப்பொருள் சம்பந்தமாக செயல் அலுவலர், மோப்பிரிபாளையம் பேரூராட்சி அவர்களின் அறிக்கையும் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. .

மோப்பிரிபாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண். 204/2016/நாள் 27.7.2017 ல் 2012-13 ம் ஆண்டு முதல் 2015-16 ஆண்டு வரையிலான அனைத்து ஆவணங்களும் ஊழல் தடுபபு மற்றும் கண்காணிப்பு துறையினரால் எடுத்துக் செல்லப்பட்டு மேற்படி துறையினரால் நீதி மன்றத்தில் தொடரப்பட்ட குற்ற வழக்கிற்காக ஆவணங்கள் நீதி மன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினரால் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ள விவரம் வரப்பெற்றுள்ளது. எனவே 2014-ஆம் ஆண்டு

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (b) ன்படி நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்திடலாகாது. எனவே மேற்படி சட்டக் கூறுகளின்படி இம்முறைமன்ற நடுவ விசாரணை நடவடிக்கைகள் தற்போது கைவிடலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

நீதிமன்ற ஆணைகளின்படி தக்க தொடர் நடவடிக்கைகள உறுதி செய்வதுடன் அறிக்கை ஒன்றினையும் இம்முறைமன்ற நடுவத்தில் செயல் அலுவலர் தாக்கல் செய்யவேண்டுமென்பதை தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

207ம் ஆண்டு அக்டோபர் திங்கள்11-ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர்

-//உத்திரவின்படி - அனுப்பப்படுகிறது//-

செயலாளர். 12x17

பெறுநர்

1.திரு ஆர். ஆறுமுகம்,
முன்னாள் 1 வது வார்டு உறுப்பினர்
மோப்பிரிபாளையம் பேரூராட்சி,
காடுவெட்டிபாளையம் அஞ்சல்,
சூலூர் வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம்

2.செயல் அலுவலர்,
மோப்பிரிபாளையம் பேரூராட்சி,
சூலூர் வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.